Registered as a Newspaper

தொழிற் பயிற்சி
RADIO, T.V. DECK REPAIRING, ELECTRICAL WIRING, WINDING.
வகுப்புகள் ஆரம்பம்: 22 - 3 - 86
காலை 9 மணி
JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, Stanley Road, JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

COMPUTER PROGRAMMING COBOL LANGUAGE
குறிப்பிட்ட மாணவர் அனுமதிக்கப்படுவர்.
எமது நிறுவனத்தில் மட்டுமே COBOL LANGUAGE பயிற்சியளிக்கப்படுகிறது.
Basic படித்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
ஆரம்பம்: 22-3-86
காலை 9 மணி
JAFFNA Technical Institute.
52/1, Stanley Road, JAFFNA.

ஏடு:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 8 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 9 (21-03-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:106

கறுப்புச் சட்டைகளின் 2 நாள் வெறியாட்டம்

# நெடுங்கேணியில் தமிழர் சுட்டும் எரித்தும் கொலை

## இறந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நெடுங்கேணி, ஈட்டிமுறிந்தான் சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களில் சிலரது விவரங்கள்;-

ரவீந்திரன் கமலகுமாரி வயது 25 ஒரு பிள்ளைக்குத் தாய்.

பொன்னம்பலம் குகதாஸ் வயது 30

இவரின் சகோதரரும் கொல்லப்பட்டார். சகோதரரின் பெயர் அறியப்படவில்லை.

பெருமாள் சிறிரங்கன் வயது 60

அ. நேரு வயது 45 நாலு பிள்ளைகளுக்குத் தந்தை.

கே. கைலைக்குட்டி வயது 35.

கே. விசுவலிங்கம் வயது 55.

இ. செல்லத்துரை வயது 38.

ஆறுமுகம் வயது 36. மேற்படி சம்பவத்தில் காயம் அடைந்தோர்.

பெரியசாமி மாணிக்கம் வயது 65. தையற்காரர் கையில் காயம்.

இராசு பரஞ்சோதி 45 வயது.

கந்தையா செல்லையா வயது 74.

## வீடுகள், கடைகளை கொள்ளை அடித்த பின் தீவைத்து நாசம்

### மக்கள் காடுகளுக்கு தப்பி ஓட்டம்

— அலுவலகச் செய்தியாளர்: பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், மார்ச் 21

நெடுங்கேணியில் உள்ள ஈட்டிமுறிந்தான் என்ற இடத்தில் கறுப்புச் சட்டைகள் அணிந்த பெருங் கூட்டத்தினர் இரண்டு நாட்கள் வெறியாட்டம் நடத்தினர்.

அவர்கள் இருபத்தைந்துக்கும் குறையாத தமிழர்களை சுட்டும், கடைகள், வீடுகளோடு சேர்த்து உயிரோடு எரித்தும் கொலை செய்தனர் என்று சொல்லப்படுகிறது.

வீடுகள், கடைகள் எரிக்கப்படுமுன்னர் அவற்றில் இருந்த பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன என அறியப்படுகிறது.

கறுப்புச் சட்டைக்காரரின் அட்டூழியத்திலிருந்து தப்புவதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் காடுகளுக்கு ஓடித் தப்பிக்கொண்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நெடுங்கேணியில் இருந்து பதவியா செல்லும் வீதியில் இருக்கிறது ஈட்டி முறிந்தான் என்னும் இடம்.

அந்தஇடத்தை நேற்று முன்தினம் சுமார் 300 கறுப்புச் சட்டைக்காரர்கள் அடைந்தனர்.

கவசவாகனங்கள், டிரக், பஸ்கள் ஆகியவற்றில் வந்த இவர்கள் காட்டுக்குள் ஒளித்திருந்தனர்.

காட்டுக்குள் ஒளித்திருந்து மாலை 4 மணி அளவில்ஈட்டிமுறிந்தான் கிராமத்திற்குள் இவர்கள் நுழைந்தனர்.

கிராமத்தினுள் நுழைந்தவர்கள் அங்கு பல வீடுகளை உடைத்தனர்.

வீடுகளில் இருந்த நகைகள், பணம், பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பல வீடுகள் எரிக்கப்பட்டன.

முதலாவது துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் 3 பேர் அதே இடத்தில் இறந்தனர்.

இங்கு 20க்கு மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாயின.

பிற்பகல் 4·30 மணி அளவில் தொடங்கிய இந்தச் சம்பவம் 6 மணிக்கு நிறுத்தப்பட்டது.

அதன்பின்னர் கறுப்புச் சட்டைக்காரர்கள் அன்று இரவு காட்டுக்குள்ளேயே இருந்தனர். இவர்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



முந்திக் கொஞ்ச நாள் இராமண்ணமார் செய்த வேலையை, இப்ப உந்த முகமூடிக்காரர் ஒழுங்காச் செய்யினம். தாங்களும் ஒருவிதத்திலை இராமண்ணைக்கள் எண்டு நினைப்போ இவைக்கு!

கரணவாயில்

## 10 லட்சம் பெறுமதியான நகை, பணம், பொருள் கொள்ளை

### 3 குடும்பங்கள் இருந்த வீடு வெறிச்சோடிக் கிடக்கிறது

— கரவெட்டிச் செய்தியாளர் —

கரவெட்டி, மார்ச் 21

4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் 4 லட்சத்துக்கும் கூடுதலான பணமும் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் கொள்ளையிடப்பட்டன.

கரணவாய் தெற்கில் முந்திரிகைப்பழத் தோட்ட உரிமையாளர் ஒருவர் வீட்டில் இந்தச் சம்பவம் நடந்தது

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

புதன்கிழமை சாமம் ஒரு மணி அளவில் இரண்டு டக்சன் சனி கார்களில் ஆயுதபாணியாக முகமூடி யணிந்த சுமார் 15 பேர் வந்தனர்.

வீட்டுக்காரர்களை, தடிகள், பைப்புகள் என்பவற்றால் தாக்கி ஓர் அறையினுள் பூட்டி விட்டு சுமார் 2 மணித்தியாலம் தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்பொழுது 3 குடும்பங்கள் அவ்வீட்டில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பகுதியில் பிரிட்டிஷ் கூலிப்படை விமானிகள்

## பிரிட்டனிடம் இந்தியா கவலை

புதுடில்லி, மார்ச் 20

இலங்கையின் வடபகுதியில் விமானத் தாக்குதல்களில் ஈடுபடும் விமானங்களை பிரிட்டிஷ் கூலிப் படை விமானிகளே செலுத்துகின்றனர் என்பதை இந்தியா, பிரிட்டனின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

பிரிட்டிஷ் கூலிப்படை விமானிகள் இலங்கை விமானங்களைச் செலுத்துவது பற்றி நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்தே இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவி ராஜாங்க அமைச்சர் வில்லியம் ஹார்டிங் புதுடில்லி வந்த சமயம் அவரிடம் இந்தியா இத் தகவலைத் தெரிவித்து தனது கவலையையும் வெளியிட்டது

இதனிடையில் இலங்கையின் இராணுவ பலம் அதிகரிப் து. பாகிஸ்தா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 400 பேர் விசாரணை

மட்டக்களப்பு, மார்ச் 21

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை நடத்தப்பட்ட இரண்டரைமணி நேரத் தேடுதலில் சுமார் 400 தமிழர்கள் விசாரணைக்காக கல்லடி அதிரடிப்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இ.போ.ச, தனியார் பஸ்கள், வாகனங்கள் மறிக்கப்பட்டு பயணிகளும் சோதனை இடப்பட்டனர். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் அரச ஊழியரும் அடங்குகின்றனர்.

## புதிதாக அப்படி ஒன்றுமே இல்லை!,

### இலங்கையிலிருந்து ராஜீவுக்கு

புதுடில்லி, மார்ச் 20

பிரதம மந்திரி ராஜீவ் காந்தியுடன் கடந்தபுதன்கிழமை நடந்த15நிமிடச் சந்திப்பில் இலங்கை அரசின் சார்பில் புதியயோசனைகள் எதையும் இலங்கைத் தூதர் பேர்னுட் திலகரத்தின முன்வைக்கவில்லை.

இனப் பிரச்சினைக்கான தீர்வு காணும் விஷயத்தில் இந்தியாவின் நல்லெண்ண உதவிகளை இலங்கை அரசு வரவேற்கின்றது என்பதையே திரு. பேர்னுட் திலகரத்தின திருப்பத் திரும்ப வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

புதிதாக எந்த யோசனைகளையும் அவர் பிரதமரிடம் கொடுக்கவில்லை.

வரையறுக்கப்பட்ட சுயாட்சித் திட்டம் ஒன்றை கிழக்கு மாகாணத்தில் அமுல் நடத்தப் போவதாகக் கூறப்படும் இலங்கை அரசின் உத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் ஆயுத பலம்

- 21 பெல் ஹெலிக்கொப்டர்கள்
- 12 சண்டை விமானங்கள்
- 150 கவச வாகனங்கள்
- 60 ரோந்துக் கப்பல்கள்

புதுடில்லி, மார்ச் 20

இலங்கையின் ஆயுத பலம் பல மடங்காக அதிகரித்துள்ளன.

● சிங்கப்பூரில் இருந்து 21 பெல் ஹெலிக்கொப்டர்கள். வானத் தாக்குதல் நடத்தக்கூடியனவையாக அவை மாற்றப்பட்டுள்ளன.

● 12 இத்தாலிச் சண்டை விமானங்கள். வானத் தாக்குதலுக்குப் பயன்படுத்தக்கூடியவை.

● 150 கவச வாகனங்கள். இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்து வாங்கப்பட்டவை

● சுமார் 30,000 சிறுரக ஆயுதங்கள். ஏராளமான மோட்டோ குண்டுகள். சீனா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்து வாங்கப்பட்டுள்ள தன்னியக்கரைபிள்கள்.

● 135 மி.மி. நடுத்தர துப்பாக்கிகள், ரொக்கட் லோஞ்சர்கள் ஏராளமான குண்டுகளுடன்.

● இலங்கைக் கடற்படைக்கு 60 ரோந்துக் கப்பல்கள். இவற்றைவிட கரையோரக் கப்பல்கள் வேறு.

இவ்வளவு ஆயுதங்களும் தமிழ்ப் போராளிகளை நசுக்க இலங்கை வாங்கி உள்ளது என்று திரு ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

## ரஷ்ய தூதரும் அரசியல் தீர்வையே வலியுறுத்துகிறார்

கொழும்பு, மார்ச் 21

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்படவேண்டும்

இப்படி இலங்கையில் உள்ள ரஷ்யத் தூதர் தெரிவித்தார்.

ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் 26ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கொழும்பில் ரஷ்யத் தூதர் ஒரு செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அப்போதே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்

ரஷ்யாவில் இனப்பிரச்சினையே கிடையாது அப்படியான அரசமைப்பு அங்கே உண்டு. நானும் ரஷ்யாவில் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவனே

இப்படி ரஷ்யத் தூதர் சொன்னார்.

பயங்கரவாதம் பற்றிக் கேட்டபோது தூதர் சொன்னதாவது:

விமானக் கடத்தல், மக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அக்மீமன

கொழும்பு, மார்ச் 21

அக்மீமன இடைத் தேர்தலில் மொத்தம் 12 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

ஐ. தே. க., ஸ்ரீ. ல. சு. க, ல. ச. ச. க. ஆகியவற்றைச் சேர்ந்த ஒவ்வொருவரும் 9 சுயேச்சைகளும் களத்தில் குதித்துள்ளனர்.

தேர்தல் ஏப்ரல் 17 ஆம் திகதி நடைபெறும்.

## கிளிநொச்சியில் நெல் தீவைத்து நாசம்

கிளிநொச்சி, மார்ச் 21

சுமார் முப்பது ஏக்கரில் வெட்டி வைக்கப்பட்டிருந்த நெற்கட்டுகள் கறுப்புச் சட்டைக்காரர்களினால் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

கிளிநொச்சி இரண்டாம் வாய்க்கால் பகுதியில் புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடந்தது.

போராளிகளால் அறுவடை செய்யப்பட்டதாகக் கருதியே கறுப்புச் சட்டைக்காரர்கள் இதனைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

பக்கத்து வயல்களில் கூலி வேலை செய்த சிலரை அழைத்தே இந்த தீவைப்பு வேலை நடத்தப்பட்டதாம்.

நெல் வயலுக்குத் தீ மூட்டியவர்கள் ஏனைய வயல்களுக்குத் தீ பரவாதவாறு எல்லைப்புறங்களை உழவு இயந்திரம் ஒன்றினால் உழுதுவிட்டுச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

## இலங்கைக்கு வந்த பாக். யுத்தக் கப்பல்கள் குறித்து பலிராம் பகத்

புதுடில்லி, மார்ச் 20

கராச்சிக்கு 'என்டர்பிரைஸ்' என்ற அமெரிக்க யுத்தக் கப்பல் சென்ற சமயம் கொழும்புக்கு இரண்டு பாகிஸ்தான் யுத்தக் கப்பல்கள் நல்லெண்ண விஜயமாக சென்றன.

இது இந்தியாவுக்குக் கவலை தருகிறது.

இப்படி இந்திய வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத் இந்திய நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:

பாகிஸ்தானுக்கு 'என்டர்பிரைஸ்' என்ற அமெரிக்க யுத்தக் கப்பல் உட்பட 5 கப்பல்கள் சென்றன. வெளிநாட்டு யுத்தக் கப்பல்களுக்கு பாகிஸ்தான் இடமளிக்கிறது.

இந்து மாகடலில் அமெரிக்க யுத்தக் கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

அண்டைப் பகுதிகளில் வெளிநாட்டுத் தலையீடு இருப்பதை இந்தியா எதிர்த்து வந்துள்ளது.

இப்படி திரு பலிராம் பகத் சொன்னார்.

## ★ 83 பேர் வெளியே வர 35பேர் உள்ளே

திருகோணமலை, மார்ச் 21

திருகோணமலையில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 35 தமிழர், நேற்று பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

இதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 83 தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டு, திருகோணமலைப் போய்ச் சேர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுபநேரம்

21- 3- 1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.18 முதல் 7.48 வரை
ராகுகாலம்:
10·48 முதல்12 18 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இலங்கை இனப்பிரச்சினை:

## பண்டாரி சிறப்புத் தூதர்: தொடர்ந்து பணி புரிவார்

புதுடில்லி, மார்ச் 20

திரு. ரொமேஷ் பண்டாரி, இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் சிறப்புத் தூதுவராகப் பணியாற்றுவார்.

இந்திய அரசு இது சம்பந்தமான முடிவை ஏற்கனவே எடுத்து விட்டதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

திரு. பண்டாரி, மார்ச் 31 உடன் வெளியுறவுச் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற இருக்கின்றார் என்பது தெரிந்ததே.

அதன் பின்னர் திரு. பண்டாரி, பிரதமர் ராஜீவ் காந்தியின் சிறப்புத் தூதராக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விஷயங்களில் ஈடுபடுவார்.

## அவசரகால சட்டம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 21

மேலும் ஒரு மாத காலத்துக்கு அவசர காலச் சட்டம் நீடிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று இது சம்பந்தமான பிரேரணை ஒன்று மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி இயக்குநர்களில் விஜயனும் ஒருவர்

தமிழ் திரையுலகின் வல்லணி வெற்றி இயக்குநர்களில் விஜயனும் ஒருவர். சுமார் அறுபது படங்கள் வரை அவர் இதுவரை இயக்கியுள்ளார்

நூற்றுக்கணக்கான நடிகர், நடிகைகளை இயக்கி இருக்கும் விஜயன், ஒரு படத்திற்கு நடிகர், நடிகைகளைத் தேர்ந்து எடுக்கவுடன், இந்த நடிகரை இப்படித்தான் நடிக்க வைக்க வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானித்து விடக் கூடியவர்.

வெற்றி இயக்குநர் விஜயன் சொல்கிறார்.

'சுமார் அறுபது படங்களை இயக்கி இருக்கிறேன் இருந்தாலும் இந்தத்துறையில் இன்னும் நான் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

ஆசா பாசங்கள் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, இமயமலைச் சாரலில் தவம் இருக்கும் ஒரு யோகியின் மனதில் கூட இறைவனைக் காண வேண்டும் என்ற ஆசை தேங்கி இருக்கும்.

அதேபோல், என் மனதிலும் இயக்கும் பணியில் இன்னும் பல புதுமைகள் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் இருக்கிறது.

அதற்கான வழி முறைகளை ஒவ்வொரு நாளும் கற்றுக்கொண்டுதான் இருக்கிறேன். காலதேவன் என் உடலில் முதுமைக் கோடுகளைப் போடும் முன் நிச்சயம் என் ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

எனது இந்த ஆசை நிறைவேற நடிகர், நடிகைகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. அதற்கு அவர்கள் எப்போதும் தயாராகவே உள்ளனர்.

அதிகமான நடிகர், நடிகைகள் நாம் எதிர் பார்த்ததைப் போல் நடித்து விடுவார்கள். உதாரணத்திற்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஜெய்சங்கர், சிவகுமார், ரஜனி, கமல், மோகன், கே. ஆர். விஜயா, சுஜாதா, சரிதா, மனோரமா, ரேவதி, மாதவி, ரஜினி போன்றவர்களைச் சொல்லலாம்

இதில் சிவகுமார் மட்டும் என் முதல் படத்திலும் ஐம்பதாவது படத்திலும் கதாநாயகனாக நடித்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எழுத்துத்துறையில் இறங்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. சில சூழ்நிலையின் காரணமாக எழுதும் பணியில் ஈடுபடாமல் இருக்கிறேன். விரைவில் நிச்சயம் எழுதுவேன்' என்றார்.

தினசரி சினிமா

# எண்ணெய் விலை வீழ்ச்சி: தடுக்க புதிய நடவடிக்கை

### உற்பத்திக் கொள்கைகளில் 'ஒபெக்' அமைச்சர்கள் உடன்பாடு

ஜெனீவா, மார்ச் 20

எண்ணெய் விலை வீழ்ச்சியைத் தடுக்க எண்ணெய் உற்பத்தி குறைப்பு கொள்கையில் ஜெனீவா மாநாடு உடன்பாடு கண்டுள்ளது

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் 13 நாடுகளின் அமைப்பான ஒபெக் எண்ணெய் அமைச்சர்கள் ஜெனீவாவில் கூடி இது பற்றி ஆராய்ந்த பொழுதே இந்த உடன்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எண்ணெய் விலை அவசரவாசியாக வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கான திட்டங்களை இந்த மாநாடு விரிவாக ஆராய்ந்தது

ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் உற்பத்தி செய்ய வேண்டிய எண்ணெயின் அளவு தொடர்பான விடயத்தில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் எண்ணெய் உலக விலையில் சரிவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும் 'ஒபெக்'கில் அங்கம் வகிக்காத எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளை விலை நடைமுறைகளில் வென்றெடுக்கவும் முடியும் என மாநாடு கருதுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மிகுந்த கண்காணிப்பு எல்லைகளில் வேண்டும்

### ராஜீவ் அபாய அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 20

நாட்டின் எல்லைப் பகுதியில் பணிபுரியும் பொலீஸார் மிகுந்த கண்காணிப்புடன் செயல்பட வேண்டும் வெளிச் சக்திகள் எல்லைக்குள் ஊடுருவல் செய்யும் அபாயம் உள்ளது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி மாநில, மத்திய பொலீஸ் அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் சொன்னார்

நாட்டின் பந்தோபஸ்து, சட்டம் ஒழுங்கு நிலைநாட்டுதல் ஆகியன குறித்து பொலீஸ்துறை விழிப்புடன் செயலாற்ற வேண்டிய காலம் இது என்றும் பிரதமர் காந்தி சொன்னார்.

நாசவேலை, உளவு பார்த்தல், வகுப்புவாத வன்செயல்கள் ஆகியவற்றில் பொலீஸ்துறை சம்மந்தப்படக்கூடாது.

இப்படி பிரதமர் வலியுறுத்தினார்

### பால்மே கொலை சந்தேகநபர் விடுதலை

ஸ்டொக்ஹோம், மார்ச் 20

சுவீடன் பிரதமர் ஓலோவ் பால்மே கொலை தொடர்பாக கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார்

அவர் மீதான குற்றச்சாட்டுக்குரிய அடிப்படைச் சான்று இல்லாததாலே அவரை விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

32 வயது கொண்ட சுவீடிஷ் பிரஜையான அந்த இளைஞன் முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் என செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

### அறிவிப்பு தவறு

மணிலா, மார்ச் 20

நடந்து முடிந்த பிலிப்பீன்ஸ் தேர்தலில் தனக்கே வெற்றி என முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் அறிவித்திருந்தது தவறானதாகும்,

இவ்வாறு பிலிப்பீன்ஸ் தேர்தல் கண்காணிப்புக் குழு தீர்ப்புக் கூறியுள்ளது.

19 நாடுகளைச் சேர்ந்த 42 உறுப்பினர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

## வெளி உலகில்

பிலிப்பீன்ஸில்

## புரட்சிவாத அரசா? தேசியசபை ஆட்சியா?

### இதுவிடயத்தில் உயர்மட்டமோதல் இருப்பதாகத் தகவல்

மணிலா, மார்ச் 20

பிலிப்பீன்ஸின் ஜனாதிபதி கொராசன் அக்கியூனோவின் அரசுக்குள் கருத்து முரண்பாட்டுப் பிளவு உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிலிப்பீன்ஸ் ஆட்சி எப்படி அமையவேண்டும் என்பதில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளே இதற்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது

ஜனாதிபதி கொராசன் அக்கியூனோவின் மிக நெருங்கிய அரசியல் ஆலோசகர்கள் புரட்சிவாத அரசொன்று பிலிப்பீன்ஸில் பிரகடனப் படுத்தப்படவேண்டுமென விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அதேவேளை உபஜனாதிபதி சல்வடோர் லோரேஸ் தலைமையிலான பிரிவினர் தேசியசபை மேலும் நடைமுறையில் இருக்கவேண்டுமென விரும்புகிறார்கள்.

பிலிப்பீன்ஸைக் குட்டிச் சுவராக்கிய மார்க்கோஸ் திட்ட அமைப்புகளைத் தகர்க்கவேண்டும் எனவும் அதற்கு புரட்சிவாத அரசே பொருத்தமானது எனவும் பெருந்தொகையானோர் நம்புகிறார்கள். இந்தக் கருத்தை திருமதி அக்கியூனோவின் நிறைவேற்றுச் செயலாளர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிலிப்பீன்ஸ் ஆட்சிமன்றமான தேசியசபை தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற சிபார்சுகளைச் செய்வதற்கு 4 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை ஒழு ஒன்று அமைக்கப்படும் என உபஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

திரு லோரேல் தீவிர அமெரிக்கச்சார்புக் கருத்துக்கொண்டவர் என ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டவர்.

### உயர்மட்ட விசாரணை

கொழும்பு, மார்ச். 21

எயர்லங்கா விமானம் ஒன்று மூன்று மணித்தியாலம் தாமதமாக சிங்கப்பூரில் இருந்து இலங்கை வந்த சம்பவம் ஒன்று தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் சாங்கி விமான நிலையத்தில் இருந்து 3 மணித்தியாலம் தாமதமாகவே இந்த விமானம் புறப்பட்டதாம்.

இரண்டு விமான ஓட்டிகளில் ஒருவர் வெளியே போய்விட்டு 3 மணித்தியாலம் தாமதமாக வந்ததே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

### 35 பேருக்கு கடிதம்

மட்டக்களப்பு, மார்ச் 21

வெலிக்கடை, பூஸா முதலிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் பார்ப்பதற்காக மட்டக்களப்பில் புதனன்று 35 பேர், அரசாங்க அதிபரின் கடிதங்களைப் பெற்றனர்.

அரசாங்க அதிபரின் கடிதத்துடன் தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்க்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்ததைத் தொடர்ந்துதான் அரசாங்க அதிபர்களிடம் இருந்து கடிதங்கள் பெறப்படுகின்றன.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்த பெரியார்

### சுன்னாகம் முத்துக்குமாரசாமிப்பிள்ளைக்கு புகழாரம்

சுன்னாகம் மார்ச் 21

தமிழையும் சைவத்தையும் போற்றிப் பாதுகாத்தவர் பெரியார் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை. அவரின் கல்விப் பணியும்-கடவுள் தொண்டும்-தந்தையார் குமாரசாமிப் புலவரது நெறிகளை நேசித்த பண்பும் பாராட்டப்படவேண்டியவை

சுன்னாகம் முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்களின் 86 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் ஆசியுரை வழங்கிய சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இப்படிக் குறிப்பிட்டார்.

மயிலணி ''புலவரகத்தில்'' நடைபெற்ற இந்த விழாவில் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், புலவர்கள், விரிவுரையாளர்கள் பண்டிதர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

முத்துக்குமாரசாமிப் பிள்ளையால் சுன்னாகம் பெருமையடைந்ததா அல்லது சுன்னாகத்தால் குமாரசாமிப்புலவர் பரம்பரை பெருமை பெற்றதா என ஒரு அன்பர் என்னிடம் கேட்டார். முன் பொரு முறை தமிழ் பிராட்டி ஔவையாருக்கும் இது போன்ற சந்தேகந் தோன்றியிருக்க வேண்டும்.

ஔவையார் சொல்கிறார் சான்றோரால் இனத்துக்குப்பெருமை; ஊருக்கு உயர்வு; சமூகத்துக்கு மதிப்பு; நாட்டுக்கு நிறைவு: இதே பதிலைத்தான் அந்த அன்பருக்கு நானும் கூறினேன் என்றார் துர்க்கா துரந்தரி.

புலவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் தேவையான பல அரிய நூல்களைப் படைக்க இறையருள் வேண்டினார் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி. பேராசிரியர் தி கணேஸ்வரன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து விழாவின் தலைமைப் பேருரை நிகழ்த்திய பண்டிதர் திரு கா நமசிவாயம் முத்துக்குமாரசாமிப்பிள்ளையின் தமிழ்த் தொண்டினையும்-மதப்பற்றினையும் விரிவாக எடுத்துரைத்தார் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள திரு முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்களின் ''காசியாற்றுப்படை'' என்ற ஒரு நூலைப்படித்தாலே 'பிள்ளை' அவர்களின் தமிழ் மொழி அறிவும்-சிறந்த நெறியாள்கையும் உண்மை பேசும் பண்பும் மிக தெளிவாக புரிந்துவிடும் என்றார் அவர்.

''முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை கவிதைகள்'' நூல் வெளியீட்டுரை வழங்கிய திரு. வெங்கடேஸ் சர்மா தெரிவிக்கையில், ''கவிதை நூல் தொகுப்பிலே தெளிவும் -திட்டமும் மட்டுமின்றி எளிமை வாய்த்துள்ளமை உண்மையிற் போற்றுதற்குரியன. பரம்பரைப்புலமை கொண்ட நூலாசிரியர் தான் அனுபவித்தவற்றை உணர்ந்தவற்றை - ஒளிவு மறைவின்றி மக்களுக்குப் படைத்துள்ளார். இந்நூலில் தெய்வ மணம் கமழ்வதோடு புலவரின் இறை பக்தியும் பரவலாக தெரிகிறது என்றார்

நூல் முதற் பிரதியை சுன்னாகம் பிரஜைகள் குழு தலைவரும், முன்னாள் கல்விப் பணிப்பாளருமான திரு தி. மாணிக்கவாசகர் பெற்றுக் கொண்டார். அடுத்த பிரதியை திரு. சு. நகுலேஸ்வரன் பெற்றார்.

நூலாசிரியர் உரையாற்றுகையில் ''நீண்ட ஆயுளுடன் இருக்க நீங்கள் விரும்பினால் அதற்கான ஒரே அருமருந்து தினமும் புன்சிரிப்புடன் இருங்கள் மக்களுடன் மனம் மகிழ பேசுங்கள், சிரித்து வாழும் மக்கள் நீண்ட காலம் வாழ முடியும் என மேலைத்தேச விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்'' என்றார்.

கோப்பாய் வைத்திய கலாநிதி இராசரத்தினம் பண்டிதர் ஆசிநாதன் உட்பட பலர் ஆசியுரை வழங்கினர்

டாக்டர் (திருமதி) இ கணேஸ்வரன் நன்றியுரை வழங்கினார். செல்வி சுமதி வாமதேவனின் தேவாரத்துடன் விழா நிறைவுற்றது.

### சுதந்திரக் கட்சி கூட்டம்

கொழும்பு, மார்ச் 21

சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கூட்டம் கொழும்பில் உள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் புதன் பகல் நடந்தது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

சிலிண்டர் வெடிப்பு:

### இறந்தோர் எண்ணிக்கை மூன்றாக உயர்வு

கொழும்பு, மார்ச். 21

காஸ் சிலிண்டர் வெடித்ததில் இறந்தோர் தொகை 3 ஆக அதிகரித்தது.

கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள ஒக்ஸிஜின் கம்பனியில் சிலிண்டர் ஒன்றுக்குள் பிராணவாயு நிரப்பப்பட்டுக் கொண்டிருந்த சமயம் சிலிண்டர் திடீரென்று வெடித்தது தெரிந்ததே.

### மல்லாகம் விவசாயிகள் கழகம்

சுன்னாகம், மார்ச். 21

மல்லாகம் கிராம சேவையாளர் பிரிவு விவசாயிகள் ஒன்றிணைந்து மல்லாகம் விவசாயிகள் கழகம் ஒன்றை அமைத்துள்ளனர்.

தலைவராக திரு. த. சண்முகநாதனும் செயலாளராக திரு த. நகுலேஸ்வரனும், பொருளாளராக டாக்டர் ஆ. சிவபாதமும் தெரிவு செய்யப்பட்டனர்.

புளியம்பொக்கணை
நாகதம்பிரான்
வருடாந்தப் பொங்கல்

மேற்படி பொங்கல் உற்சவம் 25-3-86 செவ்வாய் நடைபெறும். நாட்டு நிலைமை காரணமாக இம்முறை பண்ட வாகனங்கள் மீசாலையிலிருந்து புறப்படமாட்டாது எனவே பண்ட வாகனத்தில் காணிக்கை செலுத்த உள்ளோர் தயவுசெய்து பணமாகப் பின்வரும் இடங்களில் செலுத்தலாம். எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் காணிக்கைகளைக் கொடுக்க வேண்டாம்.

சாவகச்சேரி,
வித்யா ரெக்ஸ்ரைல்ஸ், நவீன சந்தை.
கொடிகாமம்,
கௌரி ஸ்ரோர்ஸ், பஸ் நிலையம்.
பளை,
சாந்தி என்ரபிறைஸ், பஸ் நிலையம்.
இயக்கச்சி,
சிதம்பரப்பிள்ளை கடை, சந்தை.
தர்மகர்த்தா சபை.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## முரசுமோட்டையில் வயலில் வேலை செய்த இருவர் சூட்டுக்குப்பலி!

கிளிநொச்சி, மார்ச் 21

கடந்த செவ்வாய் அன்று முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டதாகவும், அவர்களது சடலங்கள் வயல்களில் இருந்து மீட்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இது சம்பந்தமாக இறந்தவர்களது உறவினர்கள் கிளிநொச்சி பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

முரசுமோட்டை முதலாம் யூனிற் பகுதியில் நடைபெற்ற இத்துப்பாக்கிப் பிரயோகத்தின்போது அ.கிருஷ்ணசாமி (55வயது) - பாரதிபுரம், எஸ். வடிவேல் (40வயது) -பொன்நகர் ஆகியோரே மரணமானார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் கடந்த ஒரு கிழமைக்கு முன்னர் தமது வீட்டிலிருந்து முரசுமோட்டைப் பகுதிக்கு அருவி வெட்டுதல், சூடு அடித்தல் போன்ற கூலிவேலை செய்வதற்காகச் சென்றதாகவும்-

கமம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் இடம் பெற்றதாகவும்-, கூறப்படுகிறது.

அடகுவைத்தோர்மறியல்

## இலங்கை வங்கி, கச்சேரி முன்பாகவும் விஸ்தரிப்பு

நல்லூர், மார்ச் 21

அடகு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம் கச்சேரி, இலங்கை வங்கி ஆகியவற்றிற்கு முன்பாகவும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

புதனன்று மூன்றாவது நாளாக யாழ் பிராந்திய மக்கள் வங்கி அலுவலகம் உட்பட அனைத்து மக்கள் வங்கிக் கிளைகளும் மறியல் போராட்டம் காரணமாக மூடப்பட்டிருந்தன

ஊழியர்கள் மூன்றாவது நாளும் தெருவோரத்தில் காவல் நின்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

அடகுவைத்தோர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றின் விவரம் வருமாறு:-

எமது மறியல் போராட்டம் [illegible] உறுதியான முடிவு கிடைக்கும் வரை கைவிடப்படமாட்டாது.

வடபகுதியில் வைத்து நகைகள் கொடுப்பதற்கான சில முக்கிய விவரங்களை திரட்ட வேண்டியிருப்பதால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர் அனைவரும் கீழ் குறிப்பிட்ட திகதிகளில் குறிப்பிட்ட வங்கிகள் முன்பாக காலை 7.00மணிக்கு கூடுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

21ம் திகதி வெள்ளிக்கிழமை- பிரதான வீதிக் கிளை. சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளை.

24ம் திகதி திங்கட்கிழமை- ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளை, காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளை.

26 ஆம் திகதி [illegible] கிழமை- கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளை, சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை.

27 ஆம் திகதி வியாழக்கிழமை- யாழ் நவீன சந்தை மக்கள் வங்கிக் கிளை, ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளை.

ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை- நெல்லியடி மக்கள் வங்கிக் கிளை.

3 ஆம் திகதி வியாழக்கிழமை- பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை.

4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை- வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளை.

இப் போராட்டம் மேற்கூறிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட இருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் பங்களிப்பையும்—

ஏனையோரது ஆதரவையும் சங்கம் கோருகிறது -இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனது உருக்கமான
வேண்டுகோள்

சென்ற 18-11-1985ஆம் ஆண்டு எனக்குச் சொந்தமான '37 ஸ்ரீ 4275' இலக்கங் கொண்ட உழவு இயந்திரம் ஒன்று புளியம்பொக்கணையில் வைத்து இனம்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுவிட்டது இயந்திரம் கடத்திச் செல்லும் பொழுது '19-11-85'ஆம் திகதி திருப்பித் தருவதாகக் கூறிச் சென்றார்கள். இன்று வரைக்கும் இயந்திரத்தைப் பற்றிய ஒருவித தகவலும் கிடைக்கவில்லை.

குடும்பத்தலைவனாகிய எனது கால் ஒன்று ஊனமாகியதனால் என்னால் ஒரு தொழிலும் செய்யமுடியாது குடும்பம்கொண்டு நடத்தும் பொருட்டு கடனாகத்தான் இவ்வியந்திரம் பெற்றேன் இக்கடன் முழுவதும் கட்டி முடிக்கவில்லை என்பதையும் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றேன். இந்த உழவு இயந்திரத்தினால் வேலை செய்து பெறும் ஊதியத்தினால் தான் எனது குடும்பம் நடத்த முடிந்தது. தற்பொழுது உணவு உண்ணவும் முடியாத நிலையில் மிகவும் கஷ்டப்படுகின்றோம் என்பதை இத்தால் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றேன். புனிதமான இயக்கங்கள் இதனைக் கண்டறிந்து மிகவிரைவில் பெற்றுத்தரும்படி மிகவும் தயவாக வேண்டுகின்றேன்.

வணக்கம்

இங்ஙனம்,
உதவிகோரும்,
அ. ஐயாத்துரை

20-3-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒருகரம் கொண்டு உன்கடமையை ஆற்று. மறுகரம் கொண்டு கடவுளைப் பற்றிக்கொள். கடமை முடிந்த பின்னர் (இருகரங்களுங் கொண்டு) கடவுளைப் பற்றிக் கொள்வாயாக.

-ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
21-03-86
த. பெ. 28

## மூன்றுவது உலக யுத்தம் இந்து சமுத்திரத்திலா?

அயல்நாடுகளுடனுன உறவுகள் குறித்து, இந்திய வெளிநாட்டு அமைச்சு இவ்வார மத்தியில் வெளியிட்ட அறிக்கை, உலகளாவ வாழும் மக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒன்ருகும்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் இராணுவ உறவுகள் துரிதமாக வளர்ந்து வருகின்றன என்ற விவரம் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அது குறித்து இந்தியாவின் கவலையும் வெளிப்படுத்தப்பட்டது.

தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்க்க வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் முழுநோக்கமும் இதன் மூலம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே நாம் விரும்புகிறேம். இவ்வாறு இலங்கை அரசு இதுவரை சொல்லி வந்ததையும், இப்போது சொல்லி வருவதையும், இனிமேல் கூறப்போவதையும் இந்தியா நம்பப் போவதில்லை என்பதற்கு முன்கண்ட அறிக்கை ஓர் எடுத்துக்காட்டு.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரத்தில் யு.என்.பி. அரசாங்கம் ஆறு வருட காலமாக இலங்கைத் தமிழ்த் தலைவர்களை 'கூ'க் காட்டி வந்தது. அதே பாணியில் இந்தியத் தலைவர்களையும் கடந்த மூன்று வருட காலமாக ஏமாற்றி விட்டது

இந்த நிதர்சன நிலையை தமிழகத் தலைவர்கள் தொடக்கம் பிரதமர் ராஜீவ் காந்தி வரையில் இப்போது உணர்ந்து விட்டனர்

தமிழர்களின் இனப்பிரச்சினையை அடித்தளமாக வைத்து இலங்கை தனது இராணுவ பலத்தை வளர்த்துக் கொண்டு இந்தியாவுடன் சருவப் பார்க்குமோ என்ற ஐயம் கூட இந்தியத் தலைவர்களுக்கு ஏற்படலாம்.

அதற்காகவே இந்தியாவை எப்போதும் பகைத்து நிற்கும் பாகிஸ்தானுடன் இலங்கை இராணுவக் கூட்டுறவு வைக்கிறதோ என்று இந்தியா சந்தேகப்பட்டாலும் நியாயமே.

பாகிஸ்தான் ஏதோ பெரிய இராணுவ வல்லரசு என்பதல்ல. ஆனல் அது அமெரிக்கா என்ற வல்லரசின் ஏகப்பிரதிநிதி என்ற அந்தஸ்தில் உள்ளதாகவே சர்வதேச அரசியல் அவதானிகள் கணித்து வைத்திருக்கிறுர்கள்.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உள்ள மிக நெருங்கிய உறவு அமெரிக்காவின் கண்ணில் குத்துகிறது. அதனல் அது பாகிஸ்தானை தனது பிரதிநிதியாக்கி வருகிறது

இத்தகைய ஓர் இராணுவவியல் சார்ந்த அரசியல் சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானுடன் இராணுவ உறவு வைத்திருப்பதாக இந்தியா சந்தேகிக்கத் தொடங்கி உள்ளது.

இதன் பின்னரும் இலங்கையின் இனப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்து வைப்பதற்கு இந்தியா விரும்புமா? அல்லது இவ்விஷயத்தை முழுக்கக் கைகழுவி விட்டு, தனது சொந்தப் போக்கில் தனக்கு ஏற்படக் கூடிய இராணுவ ஆபத்துக்களைச் சமாளிக்க நினைக்குமா? இது இனித்தான் பூரணமாகத் தெரிந்தாக வேண்டும்.

இந்திய தேசிய பாதுகாப்பு சபை ஒன்றை உருவாக்க இருப்பது முன் சொன்னதில் இரண்டாவதை நாடுமோ என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

அப்படி ஒரு சூழ்நிலை உருவானல் மூன்ருவது உலக யுத்தம் இந்து மகா சமுத்திரத்தை அண்டித்தான் தொடங்கும்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மனித இனத்தைப் பூண்டோடு ஒழிக்க வல்ல மூன்ருவது உலக யுத்தம் எமக்கு அருகில் நடப்பது யாருக்கும் பெருமை அல்ல. எனவே இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளிலும் மனித அழிவுக்கு அத்திவாரம் போடாமல் பிரச்சினைகளைச் சமாதானமாகத் தீர்க்க வேண்டும்.

ஒரு நாட்டுக்கு மட்டுமன்றி மூன்று அண்டை நாடுகளுக்கும் இந்தப் பெரும் பொறுப்பு உண்டு என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறேம்.

உலக நாடுகளும் இப்போதே இதில் அக்கறை காட்டி மூன்ருவது உலக மகா யுத்தத்தைத் தடுத்து மனித குலத்தைக் காப்பாற்ற வேண்டும்.

# சிவநெறி வளர்த்த தவஞானி

# ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்

கௌடதேசம் என்னும் வங்காளத்திலே நாட்டுப்புறத்திலே அமைதியான நல்லதொரு சூழலிலே அமைந்த கொட்டிலிலே குருகுலம் நடைபெற்றது

வேதம்வல்ல ஆசாரியர் ஒருவர் பிராமண இளைஞர்களுக்கு வேண்டிய சமஸ்கிருத நூல்களை வாய்மொழியாகக் கற்பித்தார்.

அந்தவழியாலேசென்ற ஆசாரசீலரான வழிப்போக்கன் ஒருவர், கொட்டிலுக்கு வெளியே நிழல் கொடுத்த மரத்தடியில் நின்று பாடத்தைக் கவனமாகக் கேட்டார்.

இப்படிச் சில தினங்கள் பாடம் நடைபெற்றபின், ஆசாரியர் தம் மனுக்கரைப் பரீட்சிப்பதற்காக வாய்மொழியாகச் சில வினக்களைக் கேட்டார்

இளைஞர்கள் திருப்திகரமாக விடைசொல்லாமல் திகைக்கவே. ஆசாரியர் சினந்து, நானும் தினமும் தொண்டை கிழியக் கத்துகிறேன். உங்கள் காதில் ஒன்றும் விழவில்லையோ?' என்று கூறியபின், தினமும் கொட்டிலுக்கு வெளியே நின்று கேட்டுவந்தவழிப்போக்கனை அருகழைத்து, 'என்ன? நீ கேட்டுவந்தவை உனக்கு விளங்கிற்ரு? சொல்லு பார்ப்போம்' என்று ஊக்கமளிப்ப, அந்த வழிப்போக்கன் அங்கே தான் கேட்ட பாடங்களைச் சாங்கோபாங்கமாக ஒப்புவித்தார்.

இதைக்கேட்ட ஆசாரியர், வழிப்போக்கனின் ஆசாரத்தையும் அவதானித்து அவரை முதுகில் தட்டி, 'நீதான் பிராமணன். நீ யார் என்பதைக்கூறுவாயாக' என்று கேட்டு அவரை முன்வரிசையில் தமக்கருகில் இருத்தி உயர்ந்த நூல்களை எல்லாம் ஊக்கத்தோடு சொல்லிக்கொடுத்தார்.

**யார் அந்த ஒழுக்க சீலர்?**

ஆசாரியரின் மனங் கவர்ந்து பெரிய பாடங்களைத் தினமும் மனங்கொண்ட அந்த அதியற்புத விவேகி யாவர்? அவரேதான் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் வாழ்ந்த காராளபிள்ளை ஞானப்பிரகாசர்.

ஞானப்பிரகாசர் இளைஞராயிருந்த காலம் 1621 ஆம் ஆண்டில் அடுத்த ஆண்டுகள். அக்காலத்திலே யாழ்ப்பாணத்தைக் கையாடிய போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் அரசாங்க அதிபருக்கு யாழ்ப்பாணத்தவர் வீட்டுக்கொரு பசு இறைச்சிக்காகக் கொடுக்கவேண்டும் என்று கட்டளை பிரப்பித்தனர்.

**ஞானக்கதிர்**

> இன்று பங்குனிப் பூசத் திருநாள்.
>
> ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் குருபூசை நாளும் இன்றே.
>
> தம்பிரான் சுவாமிகள் சைவம் வளர்த்த சான்றேர்.
>
> அன்னரைப் பற்றிய கட்டுரை இன்று பிரசுரமாகிறது.

நெடுந்தீவு. மன்னர் ஆகிய இடங்களில் வளர்ந்த பசுக்களைத் தின்று ஏப்பமிட்ட பறங்கியருக்கு மேலும் மாட்டிறைச்சிப் பசி உண்டாயிற்று

'மாட்டிறைச்சியாம் பறங்கிக்கு மானும் இணங்காதாம் சுட்ட கருவாடாம் பறங்கிக்குச் சோறும் இறங்காதாம்' என்று புலவர்கள் வசை பாடவும் கூச்சமடையாத கொடியவர்கள் 'கொண்டுவா மாட்டை' என்று பறையடிப்பித்தனர்.

இவ்வாருக ஞானப்பிரகாசர் பசு கொடுக்க வேண்டிய தினம் விடியுமுன் அவர் இரவிரவாகத் தோணியேறி வேதாரணியம் சென்றடைந்தார்.

சுவாமிதரிசனம்செய்தபின், திருப்புகலூர் சென்று அங்கே பெரிய அண்ணுசாமி குருக்கள் ஐயாவிடம் தீட்சை பெற்றுக்கொண்டு, அவர் சொன்னவண்ணம் சிதம்பரம் சென்று, சிவகாமியம்மையார் வாசலில் உபவாசமாய்த் தியானத்திலிருந்து, தேவியின் திருவருட் குறிப்பறிந்து கௌடதேசம் என்னும் வங்காளத்துக்குச் சென்றர்.

வங்காளதேசம் மத்தியகாலத்தில் பெருமளவில் மறுமலர்ச்சி பெறுவதற்கு பதினேராம் நூற்றுண்டில் வித்திட்டவன் வீராதிவீரன் இராசேந்திர சோழன் என்னும் கங்கைகொண்ட சோழன் அவன் தமிழ் நாட்டையும் வங்காளத்தையும் கலைப்பாலத்தால் இணைத்த சீலன்

**ஒருவருடப் படிப்பு**

வங்காள தேசத்தில் ஆசாரியரிடம் ஒருவருட காலம் கேள்விமூலம் படித்த ஞானப்பிரகாசரின் அறிவாற்றலை அளந்த ஆசாரியர், இவரை நோக்கி, 'நீபெரிய ஞான நூல்களையெல்லாம் வடமொழியிலேயே எழுதக்கூடிய பேரறிவு உனக்கு வந்துவிட்டது. நீ பல நூல்களை எழுதிப் புகழ் பெறுவாயாக' என்று வாழ்த்தி விடை கொடுத்தார்.

**திருவண்ணுமலை ஆதீனத் தீட்சை**

ஞானப்பிரகாசர் தமிழ் நாட்டுக்கு மீண்டு திருவண்ணுமலை ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்களிடம் பெரிய தீட்சைகளையும் உபதேசத்தையும், மந்திர காசாயத்தையும் பெற்றுத் தம்பிரான் சுவாமிகளாயினர் இவரைத் திருவண்ணுமலை ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் எனவும் வழங்குவாராயினர்.

**சிதம்பரத்தில் சிவப்பணி**

சுவாமிகள் ஞானமுருக்கேறிச் சிதம்பரத்தை யடைந்து சிவகாமியம்மையாரின் தடங்கருணைப் பெருங் கடலில் நனைந்து, அம்மையாரை நினைந்துருகி நெருக்கமாக இருந்து வழிபட்டுத் தம் ஆசாரியர் ஆசியின் வழி நின்று வடமொழி நூல்கள் எழுதத் தொடங்கினர்.

இவர் சிதம்பரத்தில் நீண்ட காலம் வாழ்ந்தமையால் சிதம்பரம் ஞானப்பிரகாச சுவாமிகள் எனவும் வழங்குவர்.

இவர் சிவகாமி அம்மையார் திருக்கோயிற் பணி செய்தபோது, தமக்குக் கிடைத்த பெரும் புதையலைப் பயன்செய்து பெரிய மடமும் திருக்குளமும் அமைத்துள்ளார் இவர் மடம் அமைத்த காலம் 1650 என அறியக் கிடக்கிறது

### சைவப்புலவர், வித்துவான் க. சி. குலரத்தினம்

**சுவாமிகள் எழுதிய வடமொழி நூல்கள்**

சுவாமிகள் எழுதியவடமொழி நூல்கள் பல. அவற்றில் சில மறைந்து போயின. சில ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், ஜேர்மனியர் முதலானேரின் கவனத்தை ஈர்த்துள்ளன.

அவர் எழுதிய சிவயோகரத்தினம் என்னும் நூலைப் பிரெஞ்சுக்காரரான தாரா மைக்கேல் என்பவர் பயன்படுத்தி, 'சிவயோகரத்னதி ஞானப்பிரகாச (Sivayoga-Ratna De Gnapiragasa) என எழுதியுள்ளார்.

சுவாமிகள் நூல்களின் வரிசை:-

1 பௌஷ்கராகம விருத்தி, 2 சிவஞானபோதவிருத்தி, 3 சித்தாந்த சிகாமணி, 4. பிரமாணதீபிகை, 5. பிரசாததீபிகை, 6. அஞ்ஞானவிவேசனம், 7. சிவயோகசாரம், 8 சிவயோகரத்தினம், 9 சிவசமாதி மான்மியசங்கிரகம், 10. ஒராத்திரிகற்பம்.

**சுவாமிகள் எழுதிய தமிழ் நூல்கள்**

இவருக்கு வடமொழி தான் வரும். தமிழ் வராது என வசைகூறிய வித்துவான்கள் வாய் பொத்தும் வகையில் இவர் உடனடியாகத் தமிழ் நூல்கள் எழுதியதும் உண்டு. திட்சாலட்சணம், தத்துவ வியாபாரவிவரணம், அவஸ்தா நிருபணம், மகாவாக்கிய சங்கிரணம் என்பவற்றைச் செய்யுள் நடையில் செய்தார். இவர் இன்னும் சில தமிழ் நூல்களை வசனநடையில் எழுதியதாகவும் கூறுவர்.

**சிவஞான சித்தியார் உரை**

சைவசித்தாந்தக்கோட்பாட்டுக்கு அச்சாணியாக அமைந்த சிவஞான போதம் என்னும் நூலுக்கு விளக்கமாக வந்த சிவஞான சித்தியாருக்கு மிகவருமையான உரையைஇற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன்பின்னுக எழுதித்தந்த பெருமையும் ஞானப்பிரகாச சுவாமிகளுக்கே உரியது

இவ்வுரை சிவசமவாதம் கூறுவது என்று கூறுவாரும் இரு பார்கள் என்று சுவாமிகள் எழுதியவாறே கூறுவதற்கு எழுந்தவர்களுள் ஒருவர் திராவிட மாபாடிய காரராய சிவஞான முனிவர்.

சிவஞான முனிவர் கண்ட கண்டனம் தகுதிக்குறைவானது என்று



சொல்லிக்கொண்டிருப்பவர் பெரும் பேராசிரியர் மும்மொழிக் கொண்டல் திரு. மு. அருணுசலம் அவர்கள்.

ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் மாணுக்கர்களுள் ஒருவர் வரணிதில்லைநாத தம்பிரான் சுவாமிகள், தில்லைநாதர் அன்ருெருநாள் தஞ்சவூர் மன்னனின் மகளுக்கு உண்டான நோயினை திருநீறிட்டு மந்திரஞ்சொல்லித் தீர்த்த நன்றிக்கடனுக மன்னன் உபகரித்த வேதாரணிய வயல் நிலங்கள் யாழ்ப்பாணத்துக்குத் தனிப்பெருமை தந்தன.

ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளின் குடும்பத்தில் வழிமுறையாக வந்தவர், வேதவனத்தார் என்பவர் வேதவனத்தாரின் செல்வப்புதல்வி சிவகாமி அம்மையாரின் மைந்தரே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

## ஈழமணித் திருநாடு பெற்றுக் கொடுத்த இன் தமிழ்ச் சான்றேர்

# புளொட்டின் இராணுவ மார்க்கம் மீளாய்வு

## தள மாநாட்டில் முடிவு

> தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தள மாநாடு 1986 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் தொடர்ந்து 6 தினங்கள் நடந்தது.
>
> மாநாட்டின் முடிவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் விடுத்த அறிக்கை இன்று பிரசுரமாகின்றது.

கடந்த மாசி மாதம் (1986 இல்) தொடர்ந்து 6 நாட்கள் கழகத்தின் தளமாநாடு நடைபெற்றது இது தள தலைமை அங்கத்தால் கூட்டப்பட்டு அதனல் நெறிப்படுத்தப்பட்டதொன்ருகும்.

இம் மாநாடு கழக மத்திய தாபனத்துடன் பகைமை முரண்பாடுடையதோ அதற்கு எதிரானதொன்ரே அல்ல.

தளத்தில் தனியானதொரு அமைப்பு உருவாக்குவதோ, கழகத்தை விட்டு உடைந்து செல்வதோ மாநாட்டின் நோக்கமல்ல. மாநாடு இவ்விதமான போக்கை முற்றுமுழுதாக நிராகரித்தது.

மாநாட்டின் பேராளர்களாக மத்திய ஸ்தாபனத்தின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் பங்குபற்றியதுடன் படைத்துறைச் செயலரும் (தோழர் கண்ணன்), அரசியல் செயலரும், (தோழர் வாசுதேவா) மாநாட்டில் முழுமையாக பங்குபற்றினர்கள்

அனைத்து தீர்மானங்களை முடிவெடுப்பதிலும், மாநாட்டின் முடிவில் பொதுச்சபை அங்கத்தவர்கள் தெரிவுக்கான வாக்கெடுப்பிலும் கலந்து கொண்டு தமது பூரண ஒத்துழைப்பை மாநாட்டிற்கு நல்கினர்.

கழகத்தின் தவறுகளைத் திருத்திக்கொள்வதும் குறிப்பாக கழகத்தில் நிலவிய அராஜகவாதகுணும்சத்தைத் திருத்திக் கொள்வதும் கூட்டுவேலை முறையைக் கழகத்துள் நிலைநிறுத்துவமே மாநாட்டின் பிரதான நோக்கமாகும்.

இவ்விரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதில் மாநாடு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவு வெற்றியைப் பெற்றுள்ளது

ஒரு குழுவிற்குரிய குணும்சத்தையும் அதற்குத் தகுந்தாற்போன்ற அமைப்பு வடிவத்தையும் கொண்டிருந்ததே எமது கழகம்.

ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு அரசியல் ஸ்தாபனத்திற்குரிய அமைப்பு வடிவத்தைப் பெறுவதற்கான அடிப்படையை உருவாக்குவதில் மாநாடு வெற்றி பெற்றுள்ளது

மாநாட்டுத் தீர்மானங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படும்போது எமது கழகம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கக்கூடிய முறையிலான ஒரு புரட்சிகர அமைப்பாக மாறும் என உறுதியாக நம்புகிறேம்.

கழகத்துள் நடந்த அராஜகவாதம் மாநாட்டில் கண்டிக்கப்பட்டது. நடந்த இத் தவறுகளுக்காக நாம் மனம் வருந்துகிறேம். இத்தவறுகள் நடப்பதற்குக் காரணமாயிருந்த ஒழுங்கற்ற அமைப்பு வடிவமும், தனிநபர்களின் ஆதிக்கங்களும் இல்லாதொழிக்கப்படுவதற்கான தீர்மானங்களை மாநாடு எடுத்துள்ளதைப் பகிரங்கமாக அறியத்தருகிறேம்.

இவ்வித தவறுகளில் ஈடுபட்டவர்கள் கண்டிக்கப்பட்டார்கள். இக்குற்றங்கள் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் எனவும். குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் கழகத்துள் மாத்திரமல்ல மாற்று இயக்கங்களுடனும் நாம் அராஜகவாத நடவடிக்கைகளில் சந்தர்ப்பங்களில் ஈடுபட்டுள்ளோம்.

மாற்று விடுதலை அமைப்புகளுடன் ஐக்கியப்படுவதில் எமது இத்தவறுகளும் ஒரு தடையாக இருந்துள்ளதை மாநாடு பூரணமாக ஏற்றுக் கொண்டது.

இவ்வித நடவடிக்கைகளை மாநாடு வன்மையாக கண்டித்தது. தொடர்ந்தும் இவ்வித தவறுகள் நடக்காது இருப்பதில் கழகத்தின் அனைத்து அங்கங்களும் விழிப்பாக இருப்போம் என மாநாடு உறுதிபூண்டுள்ளது.

மக்களுடன் கொள்ளும் உறவிலுங்கூட கழகம் பல அராஜகவாத தவறுகள் மேற்றுக்கொண்டதை மாநாடு ஏற்றுக் கொண்டது. இவை தொடர்ந்தும் நடைபெருமல் தடுப்பதற்கான வழிவகைகளை மாநாடு வகுத்துக்கொண்டது

கழகத்தின் உயர் அங்கத்தில் அங்கம் வகித்த தோழர் சந்ததியார் கழகத்தின் உயர் அங்கத்தாலேயே மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார் என்பதையும் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறேம்.

(மிகுதி ஞாயிறு வெளிவரும்)



**பொய்யாமொழி**

குறள்:
மறவற்க மாசற்ருர் கேண்மை துறவற்க
துன்பத்தின் துப்பாயார் நட்பு
பொருள்:
குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறத்தலாகாது; துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

# அரச மரத்தை வெட்டியதுக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நல்லூர் வெயில் உகந்த விநாயகர் கோயிலுக்கு அருகில்இருந்த அரசமரம் வெட்டி வீழ்த்தப்பட்ட செயல் குறித்து 145 பேர் பிரதேச அபிவிருத்தி, இந்த விவகார அமைச்சரிடம் முறையிட்டுள்ளனர்.

வெயிலுகந்த விநாயகர் ஆலயப் பிரதமகுருக்கள், உதவிக்குருக்கள், வழிபடுவோர் ஆகியோர் வேண்டியும் அரசமரம் வெட்டி வீழ்த்தப்பட்டது.

இந்துக்களாகிய எமக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் தலவிருட்சம் ஆகியவை புனிதமானவை.

இது சம்பந்தமாக விசாரணை செய்து தக்க நடவடிக்கைஎடுக்கப்படவேண்டும். இப்படி அமைச்சருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் அரசாங்க அதிபர், பிரதம பொறியியலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# கந்தரனுபூதி விநயகர் அகவல் மனனப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.21

கந்தரனுபூதி, விநயகர் அகவல் மனனப் போட்டிகள் இவ்வாண்டும் நடத்தப்படவுள்ளன.

சுழிபுரம் பறுளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் இலட்சார்ச்சனையை ஒட்டி கந்தரனுபூதி மனனப் போட்டியும், விநாயகப் பெருமான் உற்சவத்தை ஒட்டி விநயகர் அகவல் மனனப் போட்டியும் நடத்தப்படும்.

கந்தரனுபூதிப் போட்டி வைகாசியிலும், விநயகர் அகவல் போட்டி ஆனியிலும் இடம்பெறும்.

பங்குகொள்ள விரும்புவோர் போட்டி அமைப்பாளர் ஆசிரியர் திரு. மு. தம்பிஐயாவிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ... வில் இப்போட்டிகள் இடம்பெறும்.

## அராலி வடக்கு நீர் விநியோகம் தடைபட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 20

பெப்ரவரி 7ஆம் திகதி தொடக்கம் அராலி வடக்கு நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதனல் நூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்,

நீரிறைக்கும் யந்திரமும் பழுதடைந்து விட்டது.

புதிய நீரிறைக்கும் யந்திரத்தைப் பொருத்தி, தடைபட்ட நீர்விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கும்படி அராலி வடக்கு வாசிகள் ... உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கோரியுள்ளது.

## கைதடி கொடிதினம்

கைதடி, மார்ச் 21

கைதடி சைவ அநாதை இல்லத்தின் பதினேராவது கொடிதினம் நிலையத்தில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக திரு.எஸ். பவானி, திரு.கே சண்முகலிங்கம், திரு எஸ். கிளாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Science Academy**
Clock-Tower Road - JAFFNA.
86 A/L தாவரவியல்
திரு. பாலா
86 A/L சூழலியல் (Fcology)
ஆரம்பம்: 23 – 03 – 1986
ஞாயிறு காலை 8.30



# உதயன்

21. 03. 1986 வெள்ளிக்கிழமை



**Science Academy**
செட்டித்தெரு லேன் -- நல்லூர்.
87 A/L தாவரவியல்
திரு. பாலா
அலகு 06 அஞ்ஜியோஸ் மின் பாகுபாடு
(நடைபெறுகிறது)
நேரம்: சனி-ஞாயிறு காலை 7-00—8-00


# போராளிகள் பெரும் தாக்குதலுக்கு தயார்

## சபையில் வின்சென்ட்

கொழும்பு, மார்ச் 21
தமிழ்த் தீவிரவாதிகள் பெரும் தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகின்றார்கள். அதனால் ஆயுதப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி நாடாளுமன்ற, விளையாட்டுத் துறை அமைச்சர் வின்சென்ட் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் சொன்னார்

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பேசுகையில்,

அவசரகாலச் சட்டத்தை நீக்கினால், ஆயுதப் படை முகாம்களை வட பகுதியில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று சொன்னார்.

## வேலைநீக்க பயமுறுத்தலுக்கு தாதிகள் சங்கம் பணியாது

கொழும்பு, மார்ச் 21
வேலைநீக்கப் பயமுறுத்தலுக்குப் பணியப் போவது இல்லை. தொடர்ந்து வேலைநிறுத்தம் நடக்கும்.

இப்படி அரச தாதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வேலைநிறுத்தம் செய்த தாதிகள் அனைவரும் வேலைநீக்கஞ் செய்யப் பட்டுவிட்டனர். புதியவர் வேலைக்கமர்த்தப்படுவர் என்று அரசாங்கம் கடந்த புதன் அறிவித்தது.

இதைத் தொடர்ந்தே தாதிகள் சங்கம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

சுகயீன லீவு எடுத்துக் கொண்டு வேலைக்குச் செல்லாதவர்கள் கூட நேற்றுத் தொடக்கம் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

60,000 பேர் வரையில் தாதி வேலைக்கு விண்ணப்பித்துள்ளார்கள். ஆகவே தாதிகளின் வேலைநிறுத்தம் எம்மை பாதிக்காது — இப்படி அமைச்சுச் செயலாளர் டாக்டர் மலிங்கா பெர்னாண்டோ சொன்னார்.

700 ரூபா அலவன்ஸ் கோரி தாதிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.

## அமிரை விடவும் பயங்கரமானவர் தொண்டமான்

### லக்ஷ்மனின் கருத்து இது

கொழும்பு, மார்ச் 21
அமிர்தலிங்கத்தை விடவும் பயங்கரமானவர் அமைச்சர் தொண்டமான்.

இந்திய பாஸ்போர்ட் உள்ளவர்கள் கூட இலங்கையிலே நிரந்தரமாகத் தங்கும் அளவுக்கு நிலை பயங்கரமாக மாறுகின்றது.

இப்படி அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை பற்றிய விவாதம் நேற்று நடந்தது

திரு. ஜயக்கொடி சொன்னதாவது;

இலங்கைக்குப் பிரஜா உரிமைச் சட்டம் இனித் தேவை இல்லை என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறார்.

தேசிய இன விகிதாசாரத்தை விட்டு மாவட்ட விகிதாசாரப்படி நியமனங்கள், காணிப் பங்கீடு நடைபெற வேண்டும் என்று தொண்டமான் கோருகிறார்.

இப்படி திரு. ஜயக்கொடி சொன்னார்.

## ரஷ்ய . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
களைத் தாக்குதல் உட்பட சர்வதேச பயங்கரவாதத்தின் சகல அம்சங்களையும் ரஷ்யா வன்மையாகக் கண்டிக்கிறது.

ரஷ்ய தயாரிப்பான கிரனேட்டுக்கள் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது பற்றி கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்துத் தூதர் சொன்னதாவது:

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் பாதுகாப்பு உடன்படிக்கை எதுவும் இல்லை. ரஷ்ய தயாரிப்புக்கள் வேறுவழியாக வந்து இருக்கலாம்.

இப்படித் தூதர் சொன்னார்.

## 10 லட்சம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
இருந்தன. இம்மூன்று குடும்பங்களினதும் நகைகளும் அபகரிக்கப்பட்டன அபகரிக்கப்பட்ட ரூ. 4 லட்சம், லொறி ஒன்று வாங்குவதற்காக வைக்கப்பட்டிருந்தது.

மற்றும் தொலைக்காட்சி பெட்டி, இரண்டு ரேடியோக்கள், பாத்திரங்கள் உடுதுணிகள், மோட்டர், 'அயன்' பெட்டி ஆகியனவும் அபகரித்துச் செல்லப்பட்டன.

மேலும் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள், ரயர், கப்பிச்சுருள், சைக்கிள் என்பனவற்றை டிராக்டர் ஒன்றில் ஏற்றினர்.

ஒரு வெடிச் சத்தம் கேட்டதும் டிராக்டருடன் அப்பொருள்களை விட்டு விட்டு ஓடிவிட்டனர்.

## புதிதாக...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
தேசத் திட்டம் பற்றியும் திரு. திலகரத்தின, பிரதமருடன் பேச இல்லை என்று புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆச்சரியம் தரும் விஷயம் என்ன என்றால் போராளிகளினால்தான் வன்செயல்கள் அதிகரிக்கின்றன என்பதையே திரும்பத் திரும்ப இலங்கைத் தூதர் சொல்லிக் கொண்டு இருந்ததுதான் என்று புதுடில்லி வட்டாரங்களில் கூறப்படுகின்றது

## சுன்னாகத்துக்கு புதிய மின்மாற்றி

சுன்னாகம், மார்ச் 21
சுன்னாகம் – மயிலணி-வரியப்புலம் பகுதி மின்சார பாவனையாளர்களின் நீண்ட நாள் குறை நாளை சனிக்கிழமையிலிருந்து நீங்கிவிடும்.

புதிய மின்மாற்றி இணைப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 5 00 மணிக்கு நடைபெறுகிறது.

## நெடுங்கேணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று அதிகாலை வெளியே வந்து நெடுங்கேணி நகரத்தைச் சுற்றி வளைத்தனர்.

நெடுங்கேணியில் நூற்றுக்கு மேற்பட்ட குடி மக்கள் கைது செய்யப் பட்டனர்.

பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன.

கொள்ளை அடித்த வீடுகளில் இருந்தவர்கள் கும்பிட்டு மன்றாடியும் அவர்களை இழுத்துச் சுட்டனர்.

வயது முதிர்ந்தோர், பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் என்று பேதமின்றிக் கோரமானமுறையில் இவர்கள் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டனர். 25 பேர்வரை இச் சம்பவங்களில் இறந்தனர் என்று கூறப்படுகிறது.

சில பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். சிலர் வீடுகளுடன் எரிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தினால் நெடுங்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை முதல் செய்தி அச்சுக்குப் போகும்வரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், குண்டுவெடிப்புச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டிருந்தது.

எஞ்சியிருந்த பொது மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிக் காடுகளுக்குள் தஞ்சம்அடைந்தனர்.

நெடுங்கேணிப் பகுதி எங்கும் ஒரே புகைமண்டலமாக காட்சியளிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நெடுங்கேணிப் பகுதியிலிருந்து 3 மைல் தூரத்தில் உள்ள பெரியகுளம் என்னும் இடத்தில் பல வீடுகள் தீப்பற்றி எரிவதாகப் பிந்திக் கிடைத்த செய்திகளில் இருந்து தெரியவருகிறது.

இரண்டு நாட்கள் நடந்த சம்பவங்களிலும் கைதுசெய்யப்பட்டோர், காயமடைந்தோர் கவச வாகனங்களிலே வைக்கப் பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

இறந்தவர்களின் சடலங்கள் சிலவற்றையும் கறுப்புச் சட்டைக்காரர் வீதியில் இழுத்துச் சென்றனர் என்றும் அறியப் படுகிறது.

நெடுங்கேணியில் வர்த்தக ஸ்தாபனம் நடத்தி வந்த யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த வர்த்தகர் இராசையா என்பவரது கடையும் தாக்கப்பட்டது.

கடையில் இருந்த மூவரைச் சுட்டுக் கொலை செய்துவிட்டு சடலங்களையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

### மக்கள் விடுதலைப் படையால்

## மற்றொரு கடற்படை படகு தகர்க்கப்பட்டதாக சென்னையில் அறிக்கை

சென்னை, மார்ச் 20
கடந்த வியாழக்கிழமை இலங்கையின் வடபகுதியில் மற்றொரு கடற்படைப் படகு தகர்க்கப்பட்டதாக ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் நேற்று சென்னையில் தெரிவித்தது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கை வருமாறு:-

இம்மாதம் 14-3-86 ம் திகதி சிறீலங்கா கடற்படையினருக்கு எதிராக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை நடத்திய கடல் கண்ணி வெடித் தாக்குதலில் ஆறு கடற்படை சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். கடற்படைக்குச் சொந்தமான ரோந்துப் படகும் நிர்மூலமாக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சிறீலங்கா கடற்படையினர் ரோந்துப் படகுகளில் கடல் கண்ணிகளை அகற்றுவதில் ஈடுபட்டனர்.

கடல் கண்ணி வெடிகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த கடற்படை படகு மீது 16 – 3 – 86 அன்று மக்கள் விடுதலைப் படை மேற்கொண்ட தாக்குதலில் கடற்படைப் படகு தகர்க்கப்பட்டது.

இதன் பின் மக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட மோட்டோர் ஷெல் தாக்குதலை முறியடிப்பதற்காக ஈழ மக்கள் விடுதலைப் படையினரும் மோட்டோர் தாக்குதலை மேற்கொண்டனர்.

18 – 3 – 86 அன்று சிறீலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான மற்றுமொரு ரோந்துப் படகும் தகர்க்கப்பட்டது. இந்த நடவடிக்கையும் மக்கள் விடுதலைப் படையினராலேயே மேற்கொள்ளப்பட்டது

இவ்வாறு ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் அறிவித்துள்ளது.

## தமிழ் பகுதி .. ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
னுடனான இராணுவ உறவுகள் அதிகரிப்பது ஆகியன குறித்து பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:-

பாகிஸ்தானுடன் இலங்கை அதிக இராணுவ தொடர்புகள் வைத்திருப்பது குறித்து திட்டவட்டமான சாட்சியங்கள் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளன.

இலங்கை அரசின் பாதுகாப்புச் செலவினம் பல மடங்கு அதிகரித்துள்ளது. 1983இல் 197 கோடி 70 லட்சம் ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவினம் 1984இல் 232 கோடி 90 லட்சம் ரூபாவாக அதிகரித்தது.

1985இல் இச்செலவினம் 513 கோடி 90 லட்சம் ரூபாவாக அதிகரித்தது.

கடந்த பதினெட்டு மாதங்களில் ஆயுதங்கள் வாங்க இலங்கை அரசு பெரும் பணத்தைச் செலவழித்துள்ளது தமிழ்ப் போராளிகளை நசுக்கவே இவ்வகை ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. — என்று எழுதப்பட்டுள்ளது.


அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷ்ருகமர எக்ஸ்போர்ட் லிமிட்டெட், 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 21-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60/N/86


# விளையாட்டரங்கு

உதைபந்தாட்டம்

## பல்கலைக்கழக அணியிடம் கிறீன் பீல்ட் தோல்வி!

—விளையாட்டுச் செய்தியாளர்:– சண். ஜோண்சன்—

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணியை வென்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியிலேயே பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது.

பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் ஆரம்பமே மிக விறுவிறுப்பாகத் தொடங்கியது.

ஆட்ட நேர இடைவேளை வரை கிறீன் பீல்ட் அணி 2 கோல்களைப் போட்டு முன்னணியில் நின்றது.

இடை வேளையின் பின்னர் பல்கலைக்கழக அணி விறுவிறுப்பாக ஆடத் தொடங்கியது.

இடைவேளையின் பின்னர் 18 ஆவது நிமிடத்தில் பல்கலைக்கழக அணி முதலாவது கோலைப் போட்டதும் ரசிகர்களின் உற்சாகம் அதிகரித்தது.

இளம் ரசிகர்களின் உற்சாகமூட்டலின் துணையுடன் திடமாக ஆடத் தொடங்கிய பல்கலைக்கழக அணி வீரர்கள் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டனர்.

இதன் மூலம் கிறீன் பீல்ட் அணியை பல்கலைக்கழக அணி 3க்கு 2 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது

கிறீன் பீல்ட் அணியின் சார்பில் ஜே. ஏ. அகஸ்ரின், எஸ். டபிள்யூ கிங்ஸ்லி ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டனர்.

பல்கலைக்கழக அணியின் சார்பில் ஜே ஸ்ரனிஸ்லோஸ், எஸ். அருணன், ஏ. ஏ எம். நவாஸ் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றிலும் யாழ் பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது

அந்த ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி அணியை பல்கலைக்கழக அணி 4க்கு 3 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

## மத்தியஸ்தர் வகுப்பு ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
உதைபந்தாட்ட மத்தியஸ்தர் வகுப்புகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன.

ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த வகுப்பு இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த வகுப்புக்கள் நடைபெற உள்ளன

இந்த வகுப்பு பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ந்து நடைபெறும்.

## வவுனியாவில் தமிழ், சிங்கள அகதிகளை இடம் மாற்ற யோசனை

யாழ்ப்பாணம், மார்ச் 21
வவுனியா மாவட்டத்தில் தமிழ், சிங்கள அகதிகளை இடம் மாற்றி குடியமர்த்தும் திட்டம் ஒன்று பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

இத்திட்டம் குறித்து பொது மக்களின் அபிப்பிராயங்களை வவுனியா பிரஜைகள் குழு கோரியுள்ளது

வாரிக்குட்டியூர், கொக்குவெளி கிராமங்களில் வாழ்ந்து வந்த சுமார் 900 சிங்களக் குடும்பங்கள் அகதிகளாக பௌத்த விகாரையில் தங்கியுள்ளன.

வாரிக்குட்டியூர், கொக்குவெளி கிராமங்களைச் சுற்றிவரத் தமிழ்க் கிராமங்களே உள்ளன.

இது போன்று கறுவல் புளியங்குளம், வீமன் கல்லு ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அகதிகளாக வேறு இடங்களில் வாழ்கின்றார்கள்.

இந்த இரு கிராமங்களையும் சுற்றிவரச் சிங்களப் பகுதிகள் உள்ளன.

தமிழ், சிங்கள அகதிகளை மீண்டும் அவரவர் இடங்களில் குடியமர்த்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாம்

சிங்கள அகதிகள் பழைய கிராமங்களுக்குச் சென்று பாதுகாப்பாக வாழ முடியாத நிலையும்,

தமிழ் அகதிகளும் அதே போன்று பழைய இடங்களுக்குச் சென்று வாழ முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாம்.

இந்த நிலையில் தமிழ் அகதிகளைச் சிங்களக் கிராமங்களிலும்,

சிங்கள அகதிகளை தமிழ்க் கிராமங்களிலும் குடியமர்த்துவதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று கருதப்படுகின்றது.

இந்த உத்தேசத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மக்களின் அபிப்பிராயத்தைப் பெற வவுனியா பிரஜைகள் குழுத் தலைவர் திரு என். எம். எச். சொர்ணபால முன் வந்துள்ளார்.

## விசாரணைக்கு

மட்டக்களப்பு, மார்ச் 21
மட்டக்களப்புக் கச்சேரியின் சிற்றூழியர்களில் ஒருவரான லோகநாதன் என்பவரை ஆயுதப்படையினர் நேற்று விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்

## மன்னார் தாக்குதலில் 6 சிப்பாய்கள் பலி

### விடுதலைப் புலிகள் அறிக்கை

சென்னை, மார்ச் 20
மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கொண்டச்சி என்ற இடத்தில் உள்ள முந்திரிகைப் பண்ணையில் கடந்த புதன் கிழமை தாம் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஆறு சிப்பாய்களும் 3 உத்தியோகத்தர்களும் கொலையுண்டனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று மாலை 2 மணி அளவில் சிலாபத்துறை முகாமுக்குச் சமீபமாக உள்ள கொண்டச்சி என்ற இடத்திலுள்ள முந்திரிகைப் பண்ணையில் இருந்து 3 இராணுவ வாகனங்கள் வெளியே வந்தன.

அப்போது முன்னால் வந்த ஜீப்பை எமது வீரர்கள் பதுங்கியிருந்து தாக்கினர். இதனால் 6 சிப்பாய்களும் பண்ணையில் வேலை செய்யும் 3 உத்தியோகத்தர்களும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

சிங்களக் குடியேற்றத்தைக் கொண்ட இப்பண்ணைக்குள் ஓர் இராணுவ முகாம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை

சாவகச்சேரி, மார்ச் 21
சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை கடந்த திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடிக்கட்டடத்தில் செயல்பட ஆரம்பித்துள்ளது.

## நெடுங்கேணி சம்பவங்களில் கைதானோர்

யாழ்ப்பாணம், மார்ச் 21
நெடுங்கேணி சம்பவங்களில் கைது செய்யப்பட்டோர் சிலரின் விவரங்கள்;–

ஏரம்பு நித்தியானந்தன் 20 வயது, ஏரம்பு குகானந்தன் 18 வயது, சித்தன் முருகேசு 35 வயது, நாகலிங்கம் சண்முகராஜா 56 வயது இரண்டு பிள்ளைகளின் தந்தை, ஐயம்பிள்ளை சிவானந்தன் 36 வயது நாலுபிள்ளைகளுக்குத் தந்தை, பொன்னையா பாலசிங்கம் 36 வயது மூன்று பிள்ளைகளுக்குத் தந்தை, வேலுப்பிள்ளை ரவிச்சந்திரன் 24 வயது, சிவம்பு தவராஜா 24 வயது, செல்லையா வன்னியசிங்கம் 26 வயது, இலக்கிஸ் 32 வயது மலேரியாத் தடுப்பு ஊழியர், இலசிங்டன் லாச்சோ 36 வயது மூன்று பிள்ளைகளின் தந்தை, நாகலிங்கம் 45 வயது தேநீர் கடை ஊழியர், அப்துல் புகாரி 27 வயது தேநீர் கடை ஊழியர், கனக. சிவகுமார் 26 வயது பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்.

## ஆசார்யா அபிஷேகம்

சாவகச்சேரி, மார்ச் 21
சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான அர்ச்சகர் பிரம்மஸ்ரீ பரராசசேகர சர்மாவுக்கு மேற்படி ஆலயத்தில் இன்று 21 ஆம் திகதி ஆசார்யாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது.

ஆதீன தர்மகர்த்தா ஸ்ரீ. ப. மகாகணபதி சர்மா தலைமையில் வேதாகம சோதிட பூஷணம் சிவாசாரியர் திலகம் சி. சிதம்பரநாதக் குருக்கள் இவ்வபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

சிவாகம ஞான சாகரம் சிவஸ்ரீ. கே. சோமசுந்தரக்குருக்கள் உட்பட அந்தணப் பெருமக்கள் கூடி ஆசிகள் வழங்குவர்.


ரெலிகுளோப்

பாதுகாப்பான சூழலில் ரெலிபோன் பேச
வாய்ப்பான இடம் 'ரெலிகுளோப்'!

ரெலிகுளோப்

திட்டப் பரிசு

எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருவாய்கள், மாதாந்த அதிர்ஷ்டம், குதுவாலும், திருமணமாலும், பிரசவமாலும், விபத்தாலும், அந்திய காலமாலும் கடன் வசதிகளும், ஏராளமான நன்கொடைகளும் ஒருங்கே அமைந்த திட்டமிது. மேலும் விபரங்களுக்கு பிரதம இயக்குநர், லக்கி பெனிபிட் கோ. லிமிட்டெட், கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org